**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்.**

| | | |
|---|---|---|
| **அ.வ.எண்.** | : | **690/2022 மற்றும் 221/2024** |
| **பி.சா.** | : | **6** |
| **பெயர்** | : | திருமதி.சாந்தி |

---

**நாள்: 13.07.2026**

**சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம்: 2.45 p.m. – 3.11 p.m.**

**<u>அசல் வழக்கு எண்.690/2022 வழக்கில் 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>** செய்யவில்லை.

**<u>அசல் வழக்கு எண்.690/2022 வழக்கில் 16, 17 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

வழக்கு சொத்து என் மாமனார் சின்னராசப்பகவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். சின்னராசப்பகவுண்டருக்கு 6 ஆண்மக்கள், 4 பெண்மக்கள் உள்ளனர். சின்னராசப்பகவுண்டர் இறக்கும் முன்பு என் கணவர் மற்றும் மற்ற ஆண்வாரிசுகள் பெயரில் உயில் எழுதி வைத்திருந்தார் என்றால் சரிதான். 10.10.2008 ம் தேதியில் 3 உயில்களும், 09.12.2009 ம் தேதி மற்றொரு உயிலும் எழுதி வைத்திருந்தார் என்றால் அது பொய். பி.சா.ஆ.6, பி.சா.ஆ.7, பி.சா.ஆ.8 ஆகிய உயில் ஆவணங்களில் உள்ள புகைப்படங்களில் உள்ளது என் மாமனார் தான்

<u>13.07.2026 – அ.வ.எண்.690/2022 மற்றும் 221/2024 பி.சா.1</u>

<u>திருமதி.சாந்தி</u>

என்றால் சரியல்ல. மேற்படி உயில் பதிவு செய்ய சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நாங்கள் செல்லவில்லை என்றால் சரிதான், ஆனால் அந்த உயில் பொய்யான ஆவணம். சாட்சி மீண்டும் மேற்படி உயில் ஆவணங்களை சின்னராசப்பகவுண்டர் ரத்து செய்துள்ளார் என்று கூறுகிறார். சாட்சி மீண்டும் 1998 ல் சின்னராசப்பகவுண்டர் உயில் எழுதினார் என்றும், பின்னிட்டு ரத்து செய்ததாகவும் கூறுகிறார். சரஸ்வதி, தமிழ்செல்வன், மைதிலி ஆகியோர் சின்னராசப்பகவுண்டரின் மகனின் வாரிசுதாரர்களுக்கு 10.10.2008 தேதிய உயில் ஆவணத்தின் அடிப்படையில் தான் ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்றால் அது பொய். உயில் பொய்யானது என்பது என் மாமனார் காலமான பின்னிட்டு தான் எனக்கு தெரியவந்தது. எப்போது தெரியவந்தது என்று எனக்கு நியாபகமில்லை. 10.10.2008 மற்றும் 09.12.2009 ஆகிய தேதியிட்ட உயில் ஆவணங்கள் பொய் என்று நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். மேற்படி உயில்கள்

**13.07.2026 – அ.வ.எண்.690/2022 மற்றும் 221/2024 பி.சா.1**

**திருமதி.சாந்தி**

பொய்யாக உருவாக்கப்பட்டுள்ளது என்று தெரிந்ததினால் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆள்மாறாட்டம் நடந்ததாக குறிப்பிட்டு காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் கொடுக்கவில்லை. சின்னராசப்பகவுண்டர் அவரது விருப்பத்தின் பேரில் தான் 10.10.2008, 09.12.2009 தேதியிட்ட உயில் ஆவணங்கள் நாச்சப்பனுக்கு எழுதி வைத்துள்ளார் என்றும், நான் அதற்கு மாறாக சின்னராசப்பகவுண்டரின் இன்னொரு மகனான சின்னசாமி என்பவர் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு ஆதரவாக நான் தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி உயிலின் அடிப்படையில் தான் 02.09.2021 அன்று க.ச.எண்.571/3 காலையில் 17ம் பிரதிவாதி 1 ஏக்கரும், 16ம் பிரதிவாதி 1–1/2 ஏக்கரும் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் பொய்யான உயில் ஆவணங்களை வைத்து கிரையம் கொடுத்துள்ளார்கள். 15.09.2021ம் தேதியில் 16ம் பிரதிவாதி 571/3 காலையில் 17 செண்ட் கிரையம் பெற்றுள்ளார் என்றாலும், 30.10.2023 அன்று க.ச.எண்.571/1ல் 17ம் பிரதிவாதி 3.05 ஏக்கர் கிரையம் பெற்றுள்ளார் என்றாலும் அந்த கிரையம் செல்லாது.

**<u>13.07.2026 – அ.வ.எண்.690/2022 மற்றும் 221/2024 பி.சா.1</u>**

**<u>திருமதி.சாந்தி</u>**

அவ்வாறு கிரையம் பெற்றதன் அடிப்படையில் அனைத்து பட்டா, சிட்டா ஆகியவற்றில் 16, 17 பிரதிவாதிகள் பெற்று அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். வழக்கு சொத்துக்கள் மேற்படி உயில்களின் படி சின்னராசப்பகவுண்டரின் மகனான நாச்சப்பன் முறையாக கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>19 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>** இல்லை.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை.

Typed to my dictation as deposed by the witness in Open Court and acknowledged by him / her to be correct.

LATHA A P

Digitally signed by LATHA A P
Date: 2026.07.13 17:03:11 +0530

**I Additional District and Sessions Judge,**

**Tiruppur.**